# மதுர இதழ்


சென்னை அரசாங்கப் பரிசுபெற்ற நூலாசிரியர்

**ஆர்வி**

எழுதிய


மூன்று நாவல்கள்


**வானதி பதிப்பகம்**

தி. நகர் ❖ சென்னை-17

# முன்னுரை

மதுர இதழ் என்ற தலைப்பு மூன்று நெடுங்கதைகளுடைய தலைப்பின் முதல் எழுத்துக்களால் ஆனது.

இந்த மூன்று நெடுங்கதைகளும் தனித் தனி வெளியீடாக வெளி வந்தவை. ஒவ்வொன்றும் ஐயாயிரம் பிரதிகள் போல் விற்பனையானவை. பல்லாயிரக்கணக்கான வாசகர்களால் பாராட்டப்பட்டவை.

விலை மலிவு என்றால் சரக்கும் மலிவு என்று பலர் கருதி விடுவதாலேயே இதை உயர்ந்த பதிப்பாக, நல்ல முறையில் வெளியிட வேண்டும் என்பது பதிப்பாளர் கருத்து. அவ்வண்ணமே இதை அவர் உருவாக்கியிருக்கிறார். இந்தத் தொகுப்பிலே உள்ள முதல் கதை, 'இரவும் மங்கையும்' என்ற பெயரில் வெளிவந்தது. இரண்டாவது "ஜோடிப் பறவை" என்ற பெயரில் வெளிவந்தது. மூன்றாவது, 'கால் ரூபாய்' என்ற தலைப்பில் வெளி வந்தது. இப்போது 'மலர்' 'துணை' 'ரயிலிலே' என்ற தலைப்பில் வருகின்றன.

இந்தப் பெயர் மாற்றத்தினால் வாசகர்களுக்கு ஒரு மாறாட்டம் விளைவிக்க வேண்டும் என்பது நோக்கமல்ல. ஆனால் புதிய தொகுதிக்குப் பொருத்தமும் கவர்ச்சியுமான ஒரு பொதுப் பெயர் இட வேண்டியிருந்ததனால்தான் இந்த மாறுதல் செய்யப்பட்டிருக்கிறது.

முதல் கதை மணத்தோடு தொடங்கி, மணத்தோடு முடிவுறுகிறது. இதில் அளவுக்குமேல் சிருங்கார ரசம் இருப்பதாகச் சிலர் கருதலாம். உண்மையை யாரும் மறைப்பதற்கில்லை. நவ ரசங்களிலும் உயர்வாக, மென்மையானதாகக் கருதப்படுவது சிருங்கார ரசம்தான். கத்தி முனையில் நடப்பது போன்ற ஜாக்கிரதையுடன் சிருங்காரத்தைக் கையாளாவிட்டால் ரசம் விரசமாகிவிடும். மனம் வெறுப்பும் வேதனையும் பெற்றுவிடும். விஷய கௌரவம் போய்விடும். ஆனால் இந்தக் கதையை, சிருங்கார ரசமுள்ள இனிய கதையாக நான் எழுதவில்லை. நம் நாட்டுக்கு என்று ஒரு தனிப் பண்பு, கலாசாரம், மரபு இவற்றோடு நாம் ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்குகிறோமா அல்லது வெளி நாட்டுத் தொடர்பினால் இருப்பதையும் இழந்து, வழி புரியாமல் குழம்புகிறோமா என்பதே இந்தக் கதைக்கு